DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.30/2020
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW5 (LW5)
Defence

Name : Dharmarajan

Father Name /
Husband Name : Rangasamy

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 27th June 2025

எதிரிகள் ஆஜர்.

**முதண்மை விசாரணை**

நான் வேலூர் கூட்டுறவு துணைபதிவாளர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் துணைபதிவாளராக பணி செய்து கடந்த 31.07.2023 அன்று ஓய்வு பெற்றேன். விழுப்புரம மண்டல கூட்டுறவு சார்பதிவாளர் கள அலுவலர் வானூரில் 02.07.2018 முதல் 31.07.2018 வரை பணி செய்தேன். எனக்கு முன்பு கூட்டுறவு சார்பதிவாளர் சிவக்குமார் அவர்கள் காட்ராம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் விசாரணையை தொடக்கி என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தார். நான் மேற்படி விசாரணை தொடர்பான ஆவணங்களை

பரிசீலனை செய்து விசாரணை தொடங்கிய நிலையில் நான் திண்டிவனம் துணைபதிவாளர் அலுவலகத்துக்கு 01.08.2018 அன்று பணி மாற்றம் பெற்றேன். என்னுடைய இடைகால விசாரணை அறிக்கையை 06.08.2018 அன்று சார்பதிவாளர் களஅலுவலர் வானூர் அவர்களிடம் சமர்ப்பித்தேன். இது தொடர்பாக வணிகவியல் குற்றப்பிரிவு புலனாய்வு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சிவக்குமார் என்பவர் கொடுத்த அறிக்கையை எனக்கு பின்பு வந்த அதிகாரியிடம் நான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அறிக்கை முழுமை அடையவில்லை. நான் ஒரு மாதம் காலம் தான் அந்த அலுவலகத்தில் பணியில் இருந்ததால் அந்த அறிக்கை முழுமை பெறவில்லை. அந்த அறிக்கையில் நான் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

அந்த 81 அறிக்கையை பற்றி எனக்கு சரிவர தெரியாது என்றால் சரிதான்.

ஓம்/- (XXXX)
நீதித்துறை நடுவர்,
வானூர்.